5 JUN 2000

பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 20 வெள்ளிக்கிழமை ( 02 - 06 - 2000 ) VALAMPURI ஒலி: 165

## ★ புலிகளுடனான தென்மராட்சி மோதலில்
# இராணுவம் வெளியேற இருந்தது
# நான் அதைத்தடுத்து நிறுத்தினேன்

## ஜெனரல் அனுருத்தரத்வத்த பேட்டி

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்தம் தீவிரமடைந்து வரும் இச்சூழ் நிலையில் தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப்புலிகளுக் கெதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த மூவாயிரம் இராணுவத்தினர் யுத்தத்திலிருந்து பின்வாங்கிச் செல்லும் மனோ நிலையிலேயே இருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யுத்தமுனைக்கு என்னை அனுப்பியமையால் போரில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு புதிய உத்வேகத்தை கொடுத்து யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த சுயாதீன தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் நிலை கொண்டிருந்த மூவாயிரம் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் யுத்தத்தை வழிநடத்திய படைத்தளபதிகள் தென்மராட்சியிலிருந்து முற்றாக வெளியேற ஆயத்தமாகவிருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வேண்டுகோளுக்கமைய நான் வடபகுதி யுத்தமுனைக்குச் சென்றேன் என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று முனதினம் சுயாதீன தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

படைத்தளபதிகள் தென்மராட்சியிலிருந்து வாபஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது [க-வ]

## யாழ். செயலக உணவுக் களஞ்சியத்தில் நேற்று பட்டப்பகலில் திருட்டு
### உயரதிகாரிகளால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக குருநகர் உணவுக் களஞ்சியத்தில் இருந்து பெருமளவு பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் பால்மா வகைகள, சீனி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 5 மாதத்திற்குரிய உணவு கையிருப்பில் உண்டு

(கொழும்பு)

யாழ். குடா நாட்டுக்கு 5 மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் அத்தியாவசியப் பொருட்களுடன் கப்பல் ஒன்று யாழ் வந்தடைந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## உறவினர் கண்கலங்க யாழ்.கைதிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 42 சிறைக் கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் இருந்த 42 கைதிகளுடன் சிறைச்சாலை ஊழியர்கள் 11 பேரும் களுத்துறைச்சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### நயினை உற்சவ பஸ் சேவை
## ஊரடங்கு சட்டத்தைக் கவனித்து அடியார்கள் நடந்துகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இன்று முதல் யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலையத்தில் இருந்து குறிகட்டுவான்வரை தினமும் காலை 7 மணியிலிருந்து 9 மணிவரை பஸ்சேவை நடத்தப்படும் என வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்- பல்கலை பரீட்சைமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சிறப்பு விஞ்ஞான மாணி இரசாயனவியல், விலங்கியல், கணிதம் ஆகிய துறைகளுக்கான பரீட்சை முடிவுகள் நேற்று முன் தினம் வெளியாகின.

மேற்படி துறைகளில் இரு மாணவர்கள் முதல் தரத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வருகைதரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர்கள் அனைவரையும் விரிவுரைகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபத்திற்கு வருகைதருமாறு உடற்கல்வி மாணவர் மன்ற தலைவர் கேட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தகபீட 1ம், 2ம், 3ம், வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ச)

## புலிகளின் எறிகணைத் தாக்குதலை படையினர் முறியடித்தனர்

(கொழும்பு)

கொழும்புத்துறைப் பகுதியில் விடுதலைப்புலிகள் படையினர் மீது எறிகணைகள் மற்றும் துப்பாக்கிகள் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் படையினர் அதனை முறியடித்துவிட்டதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

சரசாலை மேற்கில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டதில் 3 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் அது மேலும் தெரிவித்துள்ளது. (வ-ச)

## 'சண்டே லீடர்'தடையை எதிர்த்து உச்சநீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

'சண்டே லீடர்' பத்திரிகையை அரசாங்கம் தடை செய்ததை ஆட்சேபித்து அப்பத்திரிகையின் ஆசிரியர் மகிந்த விக்கிரமசிங்க அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சண்டே லீடர் மீதான தடையை தற்காலிகமாக

[4ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை - யாழ்ப்பாணம் கப்பல் சேவை தாமதமாகும்

திருமலை)

திருமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இரண்டாவது தொகுதி பயணிகளை ஏற்றி வரும் 'சிற்றி ஒவ்றிங்கோ' கப்பல் பயணம் சற்றுக்கால தாமதமாகும் எனதிருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் எஸ்.வேலும்மயிலும்தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களினதும்பல்வேறுசந்தர்ப்பங்களில் காணாமல் போனோர்களினதும் உறவினர்கள்மனித

(4ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில காலை வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. 426(302) காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (581)

### ஆங்கில வகுப்புக்கள்

62, பழம்றோட் கந்தர்மடம்என்னும்விலாசத்தில்ஆங்கிலம் கற்ற அனைவரும் 3-6.2000 சனி காலை 9. மணிக்கு சமுகம்தரவும், கோ.சுப்பிரமணியம். (621)

### வான் விற்பனைக்குண்டு

MITSUBISHI DELICA
(L.300 டீசல்)

50 ஸ்ரீ தொடர் இலக்கம் உடைய வான்விற்பனைக்குண்டு தொடர்பு நதனக்குமார் இல 145/5 கதிற்றல் லேன், யாழ்ப்பாணம். (575)

### தவறிவிட்டது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செ. செந்தில்மணி அவர்களின் விஷேட அடையாள அட்டை நீர்வேலிக்கும் உடுவிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கோப்பாய் என்றமுகவரிக்கு அனுப்பிவைக்கவும். (608)

### மீளப் பெற்றுக்கொள்ளவும்

எம்மிடம் திருத்தம் செய்வதற்கு தந்த T.V, Deck Radio க்களை உடன் திரும்பப் பெற்றுக்கொள்ளவும். தவறின்நாம் பொறுப்பாளிகள் அல்ல உரிமையாளர், ராஜன் எலக்றோனிக்ஸ் அச்சுவேலி. (612)

### Broiler இறைச்சிக்கோழி தேவை

BroiLer இறைச்சிக் கோழி, கள் தேவை. உடன் தொடர்பு தனபாலசிங்கம் 19 . முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ர்ர வளவு) முத்திரைச்சந்தையடி நல்லூர். (611)

### தவறிவிட்டது

16.5.2000 அன்று 4ம் குறுக்குதெருவுக்கும் வேம்படிக்கும் இடையில் ஒருகறுப்பு நிறகைபாக் தவறிவிட்டது அதில் சிறு தொகைப்பணம் பென்சன்காட்வங்கிப்புத்தகம் ஒய்வூதியவவுச்சர், அடையாள அட்டை 2உம் தவறிவிட்டன யவு செய்து கண்டெடுத்த தர்கள்வலம்புரிபணிமனையில் வ ப்படைக்கவும். தகுந்த ஒன்மானம் வளங்கப்படும் ச . விற்றோறியா. (616) அ

---

காரைநகர் புளியங்குளம்

## அருளானந்த பிள்ளையார் கோயில்

## மண்டலாபிஷேகம்

### 02 - 06 - 2000

வெள்ளிக்கிழமை பஞ்சகுண்ட சங்காபிஷேகம் நடைபெற்று அருளானந்தபிள்ளையார் தண்டிகையில் வீதியுலா வருவார். அத்தருணம் விநாயகப் பெருமானின் அடியார்கள் எல்லோரும் வருகைதந்து இஷ்டசித்திகளைப் பெற்று ஏகுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு: கிரியைகள் இரண்டு நாட்களும் நடைபெறும்.
போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது,

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்

(603)

---

## அறிவித்தல்

**பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**

திரு. பா. மே. யோ. இம்மனுவேல் சங்க விற்பனையாளர் உடன் அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

(கி/406)

---

## இடம் மாற்றம்

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**

இணை நிறுவனங்களாகிய 214G, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த

**நகுலா நகை மாடம்**

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**நியூ நகுலா ஜுவல்லறி**

ஆகிய ஸ்தாபனங்கள் தற்போது ஒரே கூரையில் கீழ்க்காணும் முகவரியில் இயங்குகின்றது. என்பதை எமது வாடிக்கையாளருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்தாபனத்தார்,
34, K. K. S. வீதி,
சுன்னாகம்.

(564)

---

## தேடுகின்றோம்

கொழும்புத்துறை நெடுங் குளம் வீதியைச் சேர்ந்த செ.கணேசலிங்கம், சரஸ்வதி, சதீஸ் ஆகியோரைத் தேடுகிறோம்.

தொடர்பு கொள்ளவேண்டியமுகவரி
செ. செல்வரத்தினம்
முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை, நவாலி,
தொலைபேசி எண் 2121

(619)

---

## சாரங்கா நகைமாடம்

எமது ஸ்தாபனம் வழமையான இடத்தில் (177/4 கஸ்தூரியார் வீதி யாழ்) இயங்குகிறது. என்பதையும் இத்துடன் சாவகச்சேரியில் இயங்கிவந்த கிளை ஸ்தாபனமாகிய

**சிவா நகை மாடமும் சாரங்காவுடன்**

சேர்ந்து இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர் நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இங்கனம்
சாரங்கா நகைமாடம்
சிவாநகைமாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-409)

---

## இடமாற்ற அறிவித்தல்

177 3. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**மதனா ஜுவல்லறி**

இணை நிறுவனம் 190A கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**மைதிலி நகை மாடம்**

என்ற இரு நிறுவனங்களும் தற்போது கீழ்க் காணும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்தாபனத்தார்
58, பிரதான வீதி, சங்கானை.

(563)

---

## கண்ணீர் அஞ்சலி

29-05-2000 அன்று மரணமடைந்த ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கையைச் சேர்ந்த

**அமரர் மார்க்கண்டு பரமேஸ்வரன்**

(முகாமையாளர், கொக்குவில் மேற்கு ஸ்ரீவராகி அம்மன் ஆலயம்)

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அயலவர்கள்
ஆனைப்பந்தி.

[622]

---

## கண்ணீர் அஞ்சலி

தேசிய கல்விநிறுவக யாழ்.இந்துக்கல்லூரி நிலைய கல்வி டிப்ளோமா இறுதித் தேர்வு ஆசிரியமாணவன்

**அமரர் கந்தசாமி சிவபாலன்** (B. Com)

அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தி அடையப்பிரார்த்திக்கின்றோம்.

சிரேஷ்ட விரிவுரையாளர்
விரிவுரையாளர்கள், ஆசிரியமாணவர்கள்
தேசியகல்விநிறுவகம்
யாழ். இந்துக்கல்லூரிநிலையம்

(599)

---

### தற்காலிக இடமாற்றம்

# யாழ்ப்பாண வணிக நிலையம்

302 (108) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண இரும்பகம்

168 கே.கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி விலாசங்களில் இயங்கிவந்த எமது நிறுவனங்கள் கீழ்க் காணும் விலாசத்தில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகின்றோம்.

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

யா/ஞானபண்டிதா பாடசாலை முன்பாக

(கி362)

மேலிருந்தும் மேலல்லார்
மேலல்லவர் கீழிருந்தும்.
கிழல்லார் கீழல்லவர்

- குறள்

வலம்புரி

# தெய்வம் நமக்குத் துணை

சுற்றம் தொலைத்து சுகம் மறந்து, சுருண்டு படுக்க இடமறியாது துன்பப்படும் வேளை ஒன்று மட்டும் புலனாகிறது. சொந்த மண்ணின் சுகம். சிறுகுடிலாயினும் அதிலே நாம் சாணும் சுகம் அலாதியானது. அதுதான் சுதந்திரத்தின் மூச்சு.

வலிபேற்கு வலிவடக்கு பிரதேசங்களில் அடைக்கலம் புகுந்த மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் முழு மூச்சில் பணிபுரிவது பாராட்டுச்குரியது முப்பது கோடியும் வாழவோம், வீழில் முப்பது கோடியும் வீழ்வோம். பாரதியின் உணர்ச்சிக்குரல். வயிரப் பாய்ச்சியபற்றுறுதி. அந்த உறுதியும் உணர்வும் எம்மிடை மலர வேண்டும்.

மணிபல்லவம் எம் மண்ணில் உண்டு. அங்கே அணி செய்யும் அன்னை அகிலாண்டேஸ்வரி. நாகபூஷணி, அன்னவருக்கு இன்று கொடியேற்றுவிழா. எங்கள் இடப் பெயர்ச்சியும், உளநெகிழ்ச்சியும் தொலைந்து துயர்கள் மடிந்து வளம் பெறப்போகின்றோம் என்பதற்குக் கால்கோள்விழா. கருணை மாகடல் தாங்கும் தாய் ஏங்கும் உளங்களுக்கு அருமருந்தென்பது கூறித்தெரிவதில்லை.

பிரகஸ்பதியின்பெயர்ச்சியும் இந்த வேளை தான் நிகழ்கிறது. ஆதலால் முகாம் வாழ்வுக்கும் ஒரு பெயர்ச்சிமுழுமுதற் கடவுளால் முகிழ்க்கப் போகிறது. அவனன்றி ஓர் அணுவும் அசையாதே.

புலரும் புலரும் புது வாழ்வு, அகலும் அகலும் கொடிய இருள் என்று பொருமிக் கொண்டிருக்கும் மக்கள் வெள்ளம். ஒன்று இறைவன் தானே தியென்று வாழும் நிலை தமிழுக்குக்கதியாவர் இருவர். மனித வாழ்விற்குச கதியாவர் ஒருவர். அந்த ஏகனே. நால் வரும், அறுபத்து மூவரும்அனுபவித்த கருணைமா கடல். எங்கள் துன்பச் சுமையிலிருந்து நீந்திக்கடக்க வாய்த்த பெருங்கருணைப் பேராழி தேடிக்கண்டுகொண்டேன் தேவனை என்னுளே என்று நாவுக்கரசர் கூறினார். இந்த அவலவேளையில்மனிதர்கள்கடவுளாக வேண்டும். இறைவன் குடியிருக்கும்கோயிலைச்சுமப்பவர்கள் கருணை வெள்ளமாய் தேவை தென்படுவோர்க்கு உதவ வேண்டும். பிறர் துயரில் பங்கு கொள்ள வேண்டும்.

சங்கங்கள் சங்கைக் குரியனவாய் நல்ல பணிகளை காலத்தின் தேவை கருதி ஆற்றவேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்


## தேடுகின்றோம்

சாவகச்சேரி இல 20 லதா வைத்தியசாலை
பழையபொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த
**கனகராசா நவகுமாரன்**
(சாவகச்சேரி நவீன சந்தை முருகன் மெடிக்கல்ஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)
**தங்கை வனிதாராணி, பெரியப்பாஇரத்தினசிங்கம்**
இவர்களின் நிலை பற்றி தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

37/1, சட்டநாதர்வீதி, (கொண்டலடி வைரவர்கோவில்), திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்
வி. லலிதாராணி (அக்கா)
(607)

## தொடர்பு கொள்க

அறவழிப் போராட்டக் குழுவின் தலைமைச் செயலக பணியாளர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

வீ ஜீ. தங்கவேல்
(தலைவர் - அறவழி)
சத்துணவுக் கூடம்
பிரதான வீதி,
பருத்தித்துறை,
(கி-405)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் இல 57 ஸ்ரான்லி வீதியில் (நாக விகாரைக்கு அருகாமை) இயங்கி வந்த
**பிரபா பாமசி**
தற்போதுஅராலிதெற்கு ஆலடிச் சந்திக்குஅருகாமையில் இயங்கிவருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
பிரபா பாமசி
(610)

## தற்காலிக இடமாற்றம்

# ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

13-14 பெரியகடை, யாழ்ப்பாணம்.
மேற்படி எமது நிறுவனம் தற்சமயம் சங்கானை பிரதான வீதி (தபால் கந்தோர் அருகாமையில்) இயங்குகின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இப்படிக்கு
நிர்வாகம்
(614)

## தேடுகின்றோம்

அரியாலை திருமகள் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டு, நுணாவில் கிழக்கு கற்குழி நாவற்பள்ளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய **கதிர்காமு யோகநாதன்** (அ.ப,அ. கூட்டுறவுச்சங்க ஊழியர்) குடும்பத்தினரைத் தேடுகின்றோம். விபரம் தெரிந்தவர்கள் எமக்குத் தகவல் தரவும்.

சி.வைகுந்தசாமி, 241, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.
C/o மு.தம்பிப்பிள்ளை (J.P), அட்டிறந்தை, அல்வாய் மேற்கு, அல்வாய்.
(609)

## தகவல் தரவும்

சாவகச்சேரி ஸ்ரேசன் றோட்டைச் சேர்ந்தசட்டத்தரணி
**த. வேலாயுதம் குடும்பத்தினர்**
பற்றிய தகவல் தெரிந்தவர்கள் [illegible]
பீற்றர்ஸ் தேவாலய நாவலி முன்பாக உள்ள
**K.G.M. படப்பிடிப்பாளர்**
அவர்களுக்கு அறியத் தரவும்.

தகவல்:
மைத்துனர் வீ. ஜீவராசா [ஜீவா]
(613)

## முக்கிய அறிவித்தல்

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணத்தில் இயங்கிய புதிய உயர் கல்லூரியில் நடைபெற்ற அனைத்து வகுப்புக்களும் (பட்டப்படிப்புகள், A/L கலை வகுப்புக்கள் யாவும்) 03-06-2000 சனிக்கிழமை முதல் வழமையான நேர சூசியின் படி நடைபெறும் என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.
வகுப்புகள் நடைபெறும் இடம்.

**உதயன் தொலைத் தொடர்பகம்**
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

இயக்குநர்
புதிய உயர் கல்லூரி
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை
[592]

## தகவல் தரவும்

நுணாவில் சந்திக்கு அருகாமையில் வசிக்கும் நீர்வேலி ப.நோ.கூ.சங்க ஊழியரான
**கந்தப்பிள்ளை வேலாயுதமூர்த்தியும், அவர் மனைவி மலர் அவர்களும்**
எங்கிருக்கிறார்கள் என்பதை அறியத்தரவும்

தகவல்
ப.கார்த்திகேசு,
மக்கள் வங்கி சுன்னாகம்
620)

## அறிவித்தல்

## சன்லைற் றைக்கிளினர்ஸ்

எமது ஸ்தாபனம் வழமைபோல பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணத்திலும் தற்காலிகமாக கொக்குவிலிலும் (பொற்பதி பிட்டி சந்தி) வழமையான சேவைகள் நடைபெறுகின்றன
(560)

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் கைதடி

# பணிப்பாளர் சபைக்கூட்டம்

எதிர்வரும் 3 - 6 - 2000 சனிக்கிழமை காலை10-00 மணிக்கு நல்லூர் ப.நோ.கூ.சங்க கட்டடத்தில் நிர்வாக சபைக்கூட்டம் நடைபெற இருப்பதால் நெறியாளர்குழுஉறுப்பினர்அனைவரும் தவறாது சமுகம்தரவும்

தலைவர்
(628)

## தகவல் தரவும்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர்
**செல்வி கிருபா வீரசிங்கம்**
அவர்களைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள்
**திருமதி கமலா இராஜசுந்தரம் ஆசிரியை**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
என்ற முகவரியில் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்
[கி-410]

## இணைந்த கணிதம்

நா அம்பி (B.Sc)
ஆசிரியருடைய வகுப்புகள்
A/L 2000,2001.2002

# பொருளியற் கல்லூரி

கே. கே. எஸ் றோட், இணுவில்.
*BARATHY*
சித்தன்கேணி
இந்நிறுவனங்களில் நடைபெறுகின்றன. (605)

# தமிழ் A. மீரா

யாழ். நகரில் நடந்த வகுப்புக்கள் அனைத்தும்
A/L Day.2000, 2001, 2002,

# பொருளியற் கல்லூரி

கே. கே. எஸ் றோட் - இணுவில்
*BARATHY*
சித்தன்கேணி.
இந்நிறுவனங்களில் 3-6-2000 [சனி] அன்று ஆரம்பமாகின்றன.

நேர அட்டவணையைப் பெற்றுக்கொள்ளவும்
(604)

# D.M.I.

மாணவர்களுக்கான[முக்கிய] அறிவித்தல்

1. கலைப்பிரிவுகள் வழமையான நேரஅட்டவணைப்படி சனிக்கிழமையில் SUBRA (சித்தன் கேணி) இலும் ஞாயிற்றுக் கிழமையில் C. B. I. (K. K. S. வீதி மருதனாமடம்) இலும் நடைபெறும்.
2. வர்த்தகப்பிரிவுகள் மேற் கூறிய இரண்டு நிறுவனங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
3. நேர அட்டவணையை இரண்டு நிறுவனங்களிலும் காலை 9-11 மணி வரை பெறமுடியும்,
4. இட மாற்றம் இருப்பின் பின்னர் அறிவிக்கப்படும்

D. M. I. நிர்வாகி
(624)

## நயினை நாகபூஷணி உற்சவம் ஆராதனை

அம்பாளே ! ஆரணியே! ஆத்தாளே! நாகம்மா !
எம்வாழ்வில் ஏற்றநலம் எய்திடவே — தெம்பாக;
உந்தன் கொடியதனை ஊர்நயினைக் கோயிலிலே
செந்தண்மை பூண்டின்று ஏற்று.

முருகனடியான்

(நயினை நாகபூஷணி அம்மன் கொடியேற்றம் இன்று)


# கொழும்பு, நீர்கொழும்பு பகுதிகள் சுற்றிவளைப்பு, 50 தமிழர் கைது

கொழும்பு மற்றும் நீர்கொழும்புப் பகுதிகளை சுற்றிவளைத்த படையினர் 50 இளைஞர் யுவதிகளை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 4 மணி முதல் முற்பகல் 11 மணிவரை கொழும்பு செட்டியார்தெரு, கதிரேசன்தெரு என்பவற்றை சுற்றிவளைத்த படையினர் லொட்ஜ்கள், கடைகள், வீடுகள் யாவற்றிலும் தேடுதலை நடத்தி 500 பேரை விசாரணை செய்ததுடன் 35 பேரைக் கைது செய்தனர். இவர்களில் 10 பேர் பெண்களாவர்.

இதேவேளை,

நீர்கொழும்புப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்திய படையினர் 15 தமிழர்களை கைது செய்துள்ளனர். இவர்களில் 7பேர் பெண்களாவர்.

மேற்படி 50 பேரும் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ. ச)

# யூன்மாத பருவகால சீட்டு வழங்கப்படமாட்டாது

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்துள்ளன எனவே மீண்டும் வழமை நிலை திரும்பும் வரை எமது சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நடைபெறுவதால் யூன் மாதத்திற்கான பருவகாலச் சீட்டுக்கள் பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட மாட்டாது என்பதனை வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க)

### 5 மாதத்திற்கு...

விட்டது என்றும் மேலும் பல கப்பல்கள் அத்தியாவசியப் பொருட்களுடன் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ.க)

### உறவினர்-.,

தற்போது யாழ். சிறைச்சாலையில் 10 கைதிகள் மட்டுமே உள்ளனர்.

கைதிகளை களுத்துறைக்கு இடமாற்றம் செய்ததை அடுத்து கைதிகளின் உறவினர்கள் கண்களில் கண்ணீர் மல்க செய்வது அறியாது திகைத்து நின்றனர். (வ-12)


## அப்பலோ வைத்திய நிலையம்

அப்பலோ வைத்திய நிலையம் மீண்டும் அதே இடத்தில் (தற்காலிகமாக) இயங்குகின்றது. முன் பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாகம்.

இல. 16.
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி 411)



## Jaffna College Institute of Technology Vaddukoddai

**Certificate Courses in Business & Scientific Applications**

- MS Word
- MS Excel
- MS Access & Power Point
- Visual Basic
- Fox Pro
- Pascal

Courses Commence on 7th June 2000
Please register now.
Fees: Rs. 1000.00 each

Director
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

(562)


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 02 -ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# மக்களைதுன்புறுத்தும் யுத்தத்தை இரு சாராரும் கைவிடவேண்டும்

## கத்தோலிக்க ஆயர்மன்றம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்மக்களை பெருந்துன்பத்தில் ஆழ்த்தும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம் செய்யவேண்டுமென கத்தோலிக்க ஆயர் மன்றம் இருசாராரிடமும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

கத்தோலிக்க ஆயர்மன்றம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்கும் யுத்தத்,ல் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் மக்கள் படும் துன்பதுயரங்களை நன்குணரவேண்டும். இதனை நன்குணர்ந்தால் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் நேசநாடுகளின் யுத்த நிறுத்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. [வ

### கண்டெடுக்கப்பட்டது

யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவன் குணரத்தினம் ரவிசங்கரின் விசேட அ. அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும். (ந)

★ ★

குளப்பிட்டிக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் உடுப்புக்களும் ஆவணங்களும் அடங்கிய பெரிய லெதர் பாக் ஒன்று ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை யோகேஸ்வரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதில் நல்லூரைச் சேர்ந்த செல்லன் குணராசா என்பவரது அடையாள அட்டையும் காணப்படுகிறது உரியவர்கள் காலை 9 - 12 மணிக்கிடையில் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும். (து)

### யாழ் செயலக..

போன்ற பொருட்களுடன் கச்சேரி நோக்கி லாண்ட் மாஸ்ரர் ஒன்று வந்தபோது அப்பகுதிக்குத் தற்செயலாக வந்தசெயலக உயரதிகாரிகள் இருவர் சந்தேகத்தின் பேரில் சம்பந்தப்பட்ட வாகன சாரதியை விசாரித்தபோது இரு பகுதியினருக்கும் இடையில் பலத்த வாதங்கள் ஏற்பட்டன.

இதனையடுத்து இராணுவத்தினர் தலையிட்டு சம்பந்தப்பட்ட நபர்களின் அடையாள அட்டைகளை பறிமுதல் செய்து உயர் அதிகாரிகளிடம் கையளித்ததுடன் லாண்ட் மாஸ்ரரையும் யாழ் செயலகத்திற்குக் கொண்டு செல்லுமாறும் பணித்தனர்.

இச்சம்பவத்துடன் இரண்டாவது தடவையாகவும் செயலகக் களஞ்சியத்தில் திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சண்டே ..

நிறுத்தவும் இத் தடையானது சட்ட விரோதமானது என உத்தரவிடவும்நஷ்டஈடுவழங்கவும் கோரியே இவ் வழக்கை த்தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

### திருமலை. . .

திருமலையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு சுமார் 4000 பயணிகள் பதிவு செய்திருந்த போதும் அவர்களில் 357 பயணிகளே அண்மையில் சிற்றி ஓவ் றிங்கோ மூலம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இக்கப்பலில் பிரயாணம் செய்வதற்கு இரு தொகுதிப் பயணிகளுக்கு நேரடி விசாரணைகள் நடைபெற்று விட்டதாகவும், அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### இராணுவம். .

பெறுவது தொடர்பாக என்னிடம் தெரிவித்ததை அடுத்து படையினர் ஒரு அடி கூட பின் வாங்க முடியாது என்றும், யாழ்ப்பாணத்தை புலிகள் வசம் ஒப்படைத்து விட்டு எங்கள் ஊரிற்கு சீருடையுடன் எப்படிச் செல்ல முடியும் என்று இளம் படையினரிடம் தாம் கேட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-ச)

### ஊரடங்கு...

ளார்.

நயினை உற்சவகால பஸ் சேவை சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது.

யாழ். பிரதேசசெயலர் பிரிவில் ஊரடங்குச்சட்டம் பிற்பகல் 3.30 மணிவரை அமுலுக்கு வருவதால் ஆலய தர்மகர்த்தாசபையினர் பகல் நேர பூசையை நேரகாலத்துடன் முடித்தால் அடியார்கள் நண்பகல் 12 மணிக்கு குறிகட்டுவான் பஸ்களில் ஏறுவதற்கு உதவியாக இருக்கும் என்றும் இதனைக்கவனத்தில் வைத்து அடியார்கள் நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [வ. க)

## நாளை விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றுவந்த பட்டபின் படிப்பு டிப்ளோமா தேசிய கல்வி நிறுவக மாணவர்களுக்கான விசேடகலந்துரையாடல் ஒன்றுநாளை சனிக்கிழமைகாலை 9-00 மணியளவில் மேற்படி பாடசாலையில் இடம் பெற உள்ளது சகலமாணவர்களும் விரிவுரையாளர்களும்இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளஉள்ளனர். (க)

### மனித. . .

உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு,

கனகரத்தினம் பாலேந்திரன் (வயது 37) நாவற்குழி சந்தி கைதடி. கணபதிப்பிள்ளை சுதாகரன் (வயது 26) சரசாலை வடக்கு, கஸ்பார் சூசைதாசன் (வயது 52), சூசைதாசன் லீலாவதி (வயது48), அருள்தேவதாஸ் (வயது 20), இரத்தினம் இராகவன் (வயது 24), 167 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். இவர்களைக் காணவில்லை என்றும் ராமநாதன் கனேஸ்வரன் (வயது 34) தற்காலிக முகவரி இணுவில் மேற்கு இணுவில் இவர் வடலியடைப்பில் உள்ள தோட்டத்தில்வைத்து கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டார் என்றும் கைது செய்ததற்கான ரசீது வழங்கப்படவில்லை என்றும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (சி-12)

### யாழ். பல்கலை. . .

சித்தி பெற்றுள்ளனர்.

இதே வேளை 93/94 கல்வியாண்டின் வியாபாரநிர்வாக மாணி, வர்த்தக மாணி ஆகிய துறைகளிற்கான பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

இன்று 93/94 கல்வியாண்டு சிறப்பு கலைமாணி பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படலாமென யாழ். பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-க)


## புலமைப் பரிசில் 2000

கடந்த ஞாயிறு வெளியாகிய வினாத்தாள்களை இன்றும் நாளையும் 10 மணி முதல் 12 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*BOND*
யாழ்ப்பாணம்

(602)


### திருத்தம்
### அவசர ஒன்றுகூடல்

யாழ்மருத்துவ பீட 21ம் அணி மாணவர்களின் ஒன்றுகூடல் 01-6-2000 நடைபெறும் என வந்த விளம்பரத்தை 02-6-2000 என திருத்தி வாசிக்கவும்.

நன்றி


## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) கிராமிய வங்கி

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

31.12.1999 ஆம் நிதியாண்டின் கணக்குமீதிகள் உறுதிப்படுத்துதல்

மேற்படி நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெறுவதால் எமது சங்கக்கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் 31.12.1999 இல் தங்கள் மீதிகளை 19.06 2000 - ம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை ப நோ.கூ.சங்கம்

31.05.2000 (கி/412)